# சுனாமிக்குப் பின்னர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் பங்குபற்றல் கரையோர வலய மீளமைப்பு மற்றும் நிலை பேறான முகாமைத்துவ செயற்திட்டம் -- 2012

## 1. அபிப்பிரயாம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(உ) மானிய உடன்படிக்கையில் சொல்லப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

தரப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் ரூபா 49,373,305 தொகையாக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 86,083,214 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினம், 2010 செப்தெம்பர் 10 தொடக்கம் 2011 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாகத் தரப்படுகின்றது.

| ஆக்கக் கூறுகள் | 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | 2010 செப்தெம்பர் 10 முதல் 2011 திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டு காலத்திற்கான செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| தொழில்நுட்ப உதவி ஆலோசனைகள் | 3,673,920 | 207,815 | 3,881,735 |
| சுற்றாடல் முறைமை மீளமைப்பு | 18,290,961 | 6,263,508 | 24,554,469 |
| தகவுற அமைத்தல் | 12,728,342 | 2,807,947 | 15,536,289 |
| வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் | 8,462,530 | 17,645,185 | 26,107,715 |
| தோழிற்பாடுகள் மற்றும் பராமரிப்பு | 6,217,552 | 9,785,454 | 16,003,006 |
| மொத்தம் | 49,373,305 | 36,709,909 | 86,083,214 |

## 2.2 விசேட (டொலர்) கணக்கு

தரப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் தவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான விசேட (டொலர்) கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் அந்த கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஐ.அ. டொலர் | ரூபா |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 171,125 | 19,491,407 |
| கூட்டு : மீள் நிரம்பல்கள் | 500,000 | 66,892,500 |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | - | (286,583) |
| | 671,125 | 86,097,324 |
| கழி:<br>பற்றுதல்கள் | (349,360) | (45,181,418) |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 321,765 | 40,915,906 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முற்பணங்கள் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பூர்த்தி செய்யப்பட்டதை உடனடுத்து விரைவாக தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 601,200 கூட்டுமொத்தத்தொகையான ஆறு முற்பணங்களில் ரூபா 194,045 தொகை 2 மாதங்கள் தொடக்கம் 4 மாதங்கள் வரை வீச்செல்லையான காலதாமதத்துடன் மீளச் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) கிறீன் வீட்டு நிருமாணத்திற்கான செலவினமாக ரூபா 500,000 தொகை கணக்கிடப்பட்டிருந்தபோதிலும், அதில் ரூபா 36,064 ஆன தொகை 2012 திசெம்பர் 31 வரை மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலகத்தின் வைப்புக் கணக்கில் பயன்படுத்தப்படாமலோ அல்லது செயற்திட்டத்திற்கு மீளளிக்கப்படாமலோ வைக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(இ) நுண்பாக கடன் நடவடிக்கைகளிற்காக 2012 நொவம்பர் 11 இல் வாகரை கோமத்தலாமடு மகளிர் கிராமிய அபிவிருத்தி சங்கத்திற்கு ரூபா 150,000 தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும் ரூபா 105,000 தொகை மாத்திரமே 10 பொது மக்களிற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 45,000 மீதி குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாமல் மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) தற்போதுள்ள வீதிகள், இடங்கள் மற்றும் சுனாமி தாக்கக் கூடிய பிரதேசங்களில் நிறுத்தப்பட வேண்டிய அவசர அனர்த்த நிலைமையைத் தடுப்பதற்கான 91 பெயர்ப் பலகைகள் பதிவீடு செய்வதற்காக 2012 யூன் 06 இல் செயற்திட்டத்திற்கும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கிடையில் ஜீஈஎப்/ஐஎப்ஏடி/ரீஆர்ஜ/டிஎம்சி/01 ஆம் இலக்க உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. செயற்திட்டம் இந்த நோக்கத்திற்காக ரூபா 682,500 ஐ செலுத்துவதற்கு உடன்பட்டதுடன் அதில் ரூபா 273,000 முற்பணமாக ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்தது. உடன்பாட்டுக் காலம் முடிவடைந்துவிட்ட போதிலும், 2012 திசெம்பர் 31 வரை வேலை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) லகுகல, பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தால், கோமாரி ஏரியை தூர்வாருவதற்காக ரூபா 1,255,480 இற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்துடன் அம்பாறை மாவட்ட செயலாளரின் பொறியியலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், அளவீட்டுத் தாள்களின்படி, உண்மையாக செய்யப்பட்ட வேலை ரூபா 1,088,742 ஆகும். ஆனால் ரூபா 1,255,480 ஆன கொடுப்பனவு பொத்துவில் பிரதேச செயலகத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ரூபா 166,738 ஆன மீதித் தொகை 2012 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கீழே விபரங்களின்படி, நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் செலவின வகுதிக்கிடையில் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்ட போதிலும் அவை புலனாய்வு செய்யப்பட்டு, இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

| | நிதிக்கூற்றுக் களிற்கான குறிப்பு 02 | செலவின வகுதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் | 8,462,530 | 8,637,011 | (174,481) |
| தொழிற்பாடுகள் மற்றும் பராமரிப்பு | 6,217,552 | 6,043,071 | 174,481 |

## 4. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 4.1 நிதிகளின் பயன்பாடு

தலைப்பு 291 - கிழக்கு மாகாணத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டிற்காக நிபி 66 வேறுபாட்டை எடுத்த பின்னர் ரூபா 65,000,000 ஆன மொத்த நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதியேற்பாட்டு விபரங்கள், செய்யப்பட்ட உண்மையான செலவினம் மற்றும் பயன்பாட்டின் சதவீதம் என்பன கீழே தரப்படுகின்றன.

| ஆக்கக் கூறுகள் | நிபி 66 கீழ் மாற்றப்பட்ட மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | பயன்பாட்டின் சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| மூலதனச் செலவினம் (13) | 60,000,000 | 45,181,413 | 75.3 |
| நிர்வாகக் கிரயம் மற்றும் வரிகள் (17) | 5,000,000 | 2,108,220 | 42.1 |
| மொத்தம் | 65,000,000 | *47,289,633 | 73.7 |

* 2011 ஆம் ஆண்டு தொடர்பான ரூபா 2,752,021 ஆன செலவினம் மற்றும் ரூபா 109,679 ஆன பொறுப்புக்கள் என்பன

தவிர்க்கப்பட்டமையால் இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்து இத் தொகை வேறுபடுகின்றது.

## 4.2 பௌதீக செயலாற்றல்

கணக்காய்விற்குத் தரப்பட்ட 2012 ஆம் ஆண்டிற்கான செலவினக் கூற்றின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்ட நடவடிக்கைகளின் செயலாற்றல் கீழே தரப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. அது மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 22% ஐ பிரதிநிதித்துவப்படுத்தியது.

| நடவடிக்கை இல | நடவடிக்கை | மதிப்பிடப்பட்ட கிரயம் |
|---|---|---|
| | | ரூபா. மில் |
| 1 | தாக்கமான மீளமைப்பு மற்றும் நிலைபேறான முகாமைத்துவத்திற்கான சிறந்த நடைமுறைகள் | 10.2 |
| 2 | தாக்கமான சூழல் நடைமுறை மிளமைத்தல் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவம் | 16.7 |
| 3 | நிலைபேறான வாழ்வாதாரம் மற்றும் காலநிலை மாற்ற பாதிப்புக்களிற்கான சீராக்கல்கள் | 34.55 |
| | மொத்தம் | 61.45 |

(அ) பின்வரும் நடவடிக்கைகளின் முன்னேற்றம் 1% இலும் பார்க்க குறைவாக இருந்தது.

| நடவடிக்கை இல | விபரம் | பாதீடு | உள்ளபடியான செய்யப்பட்ட வேலை | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| | | ரூபா மில் | ரூபா மில் | % |
| 1.1.2 | செயல்விளக்க வேலைத்தளங்களின் மீளமைப்புடன் ஈடுபடும் சமூகங்களிற்கான சமூகப்பொருளாதார தரவுகளை நாளது வரையாக்கல் | 6,000,000 | 39,780 | 0.6 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1.1.3 பீ | திருகோணமலை, கிண்ணியா மாங்குறோவ் காட்டின் பங்கு பற்றும் முகாமைத்துவம் | 6,400,000 | 23,566 | 0.3 |
| 1.1.7 பீ | சமுதாய அடிப்படை அமைந்த இடர் முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்ற சீராக்கல் நடைமுறைகளை அமுலாக்குவதற்காக செயற்திட்டப் பதவியணிக்கான தொழில்நுட்பப் பயிற்சி வழங்கல் | 1,000,000 | 2,000 | 0.2 |
| 2.3.1 | கிழக்கு மாகாணத்திற்கான காலநிலை மாற்ற சீராக்கங்களைத் தயாரித்தல் மற்றும் அமுலாக்கலிற்கான ஆதரவு | 10,200,000 | 8,718 | 0.08 |
| 3.2.1 | ஊள்ளுர் சமூகங்கள் மற்றும் ஏனைய பிரதான உரித்தாளரின் ஆலோசனையுடன் இணை முகாமைத்துவப் பகுதியில் அளவிடல் மற்றும் எல்லைகளைக்குறியிடுதல் | 5,000,000 | 20,050 | 0.4 |
| 3.2.3 அ | ஏவாகரையில் வன்பூங்காவை நிறுவுதல் | 4,000,000 | 38,650 | 0.9 |
| 3.3.1 | உள்ளுர் சமூகங்கள் மற்றும் ஏனைய பிரதான உரித்தாளிகளின் ஆலோசனைகளுடன் இணை முகாமைத்துவப் பகுதியில் அளவையிடல் மற்றும் எல்லைகள் குறித்தல் | 5,000,000 | 30,000 | 0.6 |
| 3.3.5 | முகாமைத்துவத் திட்டத்தின் பயனுறு விளைவை மதிப்பிடுவதற்காகவும் அவசியமான இடத்தில் மாற்றங்களைச் செய்வதற்காகவும் பருவகால கண்காணிப்பு மற்றம் மதிப்பாய்வு | 500,000 | 3,500 | 0.7 |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்தலைப் பொறுப்பேற்றல் | | | |
| 3.4.4 | பூங்கா எல்லைகளைக் குறிப்பதற்கான வசதிகள் வழங்குதல் மற்றும் வருகை தருவோர் கட்டுபாட்டு வசதிகளை நிறுவுதல். | 3,730,000 | 13,961 | 0.3 |
| | | ---------------- | -------------- | ---------------- |
| | மொத்தம் | 41,830,000 | 156,859 | 0.379 |
| | | ======= | ======== | ======= |

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) முற்பணங்களின் தீர்ப்பனவு
(ஆ) கணக்குப் பதிவேடுகளைப் பேணுதல்
(இ) விடுமுறைப்பதிவேடு பேணுதல்